www.Padasalai.Net www.TrbTnpsc.com

# Kanchipuram Dt

## முதல் திருப்புதல் தேர்வு - 2025

பதிவு எண்: | | | | | |

பதினொன்றாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி **பொதுத் தமிழ்** மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 14×1=14

1. "கபாடபுரங்களைக் காவு கொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" - அடிமோனையைத் தெரிவு செய்க.
அ) கபாடபுரங்களை - காவு கொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) காபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

2. ஐந்து வேளாண்மை மந்திரங்களை உலகிற்குச் சொன்னவர்
அ) அழகிய பெரியவன் ஆ) மசானபுஃபுகோகா
இ) ஸ்டெஃபான் மல்லார்மே ஈ) வால்ட் விட்மன்

3. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) முருகன் ஆ) பாரதிதசான் இ) அண்ணாமலையார் ஈ) பாரதியார்

4. ஒட்டுப் போடாத
ஆகாயம் போல - இந்த
உலகமும் ஒன்றே தான் ............ இக்கவிதையில் பயின்று வருவது
அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

5. நிரையொன்றாசிரியத் தளை எனப்படுவது
அ) மாமுன்நேர் ஆ) காய் முன் நேர் இ) விளம்முன் நேர் ஈ) விளம் முன் நிரை

6. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ........... நினை.
அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை
இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை

7. கட்டடக்கலை என்பது உறைந்துபோன இசை என்றவர்
அ) ஷூல்ஸ் ஆ) பிரடிகா வொன்ஸ்லீவிங்
இ) கே.கோவிந்தசாமி ஈ) இரண்டாம் நரசிம்மவர்மன்

8. 'பசுவய்யா' என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியவர்
அ) ப.ஜீவானந்தம் ஆ) சுந்தர ராமசாமி இ) சொரிமுத்து ஈ) பாரதியார்

9. கூவும் குயிலும் கரையும் காகமும் - தொடரில் இடம் பெற்ற மரபு
அ) பெயர் மரபு ஆ) வினை மரபு இ) ஒலி மரபு ஈ) இவை மூன்றும்

10. Pseudonym - கலைச்சொல் அறிக.
அ) குடற்காய்ச்சல் ஆ) புனைபெயர் இ) சமத்துவம் ஈ) களிம்பு

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



11. கூற்று - "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
விளக்கம் - கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு
அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி
இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

12. அகிற்புகை - இலக்கணக் குறிப்பு தருக.
அ) எண்ணும்மை ஆ) உம்மைத்தொகை
இ) ஆறாம் வேற்றுமைத்தொகை ஈ) வினைத்தொகை

13. திருகுமுருகு என்பது
அ) தண்டை ஆ) காலாழி இ) சிலம்பு ஈ) பாடகம்

14. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக.
அ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்
ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளில் பேசுகிறேன்
இ) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்
ஈ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு

## பகுதி - II

### *பிரிவு - 1*

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக:** 3×2=6

15. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
16. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
17. அகநானூற்றின் பிரிவுகளைக் குறிப்பிடுக.
18. செந்தூக்கு என்பது யாது?

### *பிரிவு - 2*

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** 2×2=4

19. மதிப்புக் கூட்டுப்பொருள் என்றால் என்ன?
20. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
21. இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

### *பிரிவு - 3*

**எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடை தருக:** 7×2=14

22. உயிர்முதல், மெய்ம்முதல் - எடுத்துக்காட்டுடன் விவரிக்க.
23. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக :* பொரி, பொறி
24. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:* கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.
25. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க :* பிண்ணாக்கு
26. *செய்தித் தொடராக்குக:* என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக்கலை

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



27. *மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:* அ) மதில் மேல் பூனை ஆ) கானல் நீர்
28. *பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க :* அ) வருடம் ஆ) உற்சாகம்
29. *பகுபத உறுப்பிலக்கணம் தருக. (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்)* அ) துய்த்தல் ஆ) துஞ்சல்
30. *புணர்ச்சி விதி தருக (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்)* அ) அரும்பொருள் ஆ) திருப்புகழ்

## பகுதி - III

### *பிரிவு - 1*

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** 2×4=8

31. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.
32. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.
33. மேகத்திடம் கூறுவது போலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?
34. "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

### *பிரிவு - 2*

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** 2×4=8

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.
36. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.
37. ஃபிரெஸ்கோ ஓவியங்கள் ; கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?
38. தாமஸிகம் என்றால் என்ன?

### *பிரிவு - 3*

**எவையேனும் மூன்றினுக்கு மட்டும் விடை தருக:** 3×4=12

39. அ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**(அல்லது)**

ஆ) வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. அ) முல்லைத்திணை விளக்குக.

**(அல்லது)**

ஆ) பாடாண் திணை - சான்றுடன் விளக்குக.

41. *புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக :*
(கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி)
அ) அடிக்கவும் செய்யலாம் ; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் ..............
ஆ) வண்டியையும் இயக்கும் ; பெரும் கப்பலையும் தாங்கும் ..............
இ) அறிவின் பெயரும் அதுதான் ; அம்புலியின் பெயரும் அதுவேதான் ..............
ஈ) எலியும் நுழையும் ; எழிலரசி கையும் நுழையும் ................

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



42. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து திரண்ட கருத்தினை எழுதி ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன் ;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்

- பாரதியார்

43. தமிழாக்கம் தருக :

அ) Work while you work and play while you play.

ஆ) The Pen is mightier than the Sword.

இ) Knowledge rules the world.

ஈ) A picture is worth a thousand words.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 3×6=18

44. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

45. அ) தாம் வாழ்ந்த கால கட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

(அல்லது)

ஆ) சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.

46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்கு.

(அல்லது)

ஆ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6

47. அ) "சிற்றூரும்" - எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடலை எழுதுக.

ஆ) "படின்" - என முடியும் குறட்பாவை எழுது.

-----------

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com